# பிளேட்டோ பேசும் நீதி: ஓர் அரசியல்சார் மெய்யியற் பார்வை
# Justice – As Expounded by Plato: Political Philosophical View

சோ. ஜெகநாதன்[1]


## ஆய்வுச் சுருக்கம்

இன்றைய நவீன தொழில்நுட்ப உலகில் மனிதனின் வாழ்வியலை செம்மைப்படுத்துவதில் மெய்யியலின் பங்கு பிரதானமானது. மனித வாழ்வியலுக்கு சவாலாக அமையும் பல்வேறு எண்ணக்கருக்களைப் பகுப்பாய்வு செய்து அதனை கோட்பாட்டுத் தளத்திலிருந்து நடைமுறை வாழ்வியலோடு தொடர்புபடுத்தி மனித வாழ்வியலை மகிழ்ச்சிகரமாக அமைப்பதற்கு மெய்யியல் ஆய்வுகள் அடிப்படையாக அமைகின்றன. அந்த வகையில் சமகாலத்தில் மனித சமுதாயத்திற்கு தேவையான நீதி என்ற எண்ணக்கருவினையும் மெய்யியல் தனது ஆளுகைக்குள் உட்படுத்திக் கொண்டது. சமூக மெய்யியலின் ஒரு பிரிவே அரசியல் மெய்யியலாகும். இவ்வரசியல் மெய்யியலில் பகுப்பாய்வு செய்யப்படும் நீதி என்ற எண்ணக்கரு ஒழுக்க மெய்யியல், அரசியல், சட்டம் போன்றவற்றிலும் பேசப்படுகின்ற ஒரு முக்கிய எண்ணக்கருவாக அமைந்துள்ளது. நீதி பற்றிய ஆய்வில் எது நீதி?, நீதியையும், அநீதியையும் பிரித்தறிவதற்கான சரியான கட்டளைக் கற்கள் உள்ளனவா? முதலான பல பிரச்சினைகள் உள்ளன. நீதி தொடர்பாக பல்வேறுபட்ட வியாக்கியானங்கள் காணப்படுவதற்கு காரணம் அது பல்வேறு தளங்களில் நின்று தொழிற்படுவதாகும். பிளேட்டோ பேசும் நீதியின் உள்ளடக்கமாக உரிமை, அறம், நடத்தை, நடுநிலைமை தவறாமை, மரபொழுக்கம் போன்றவை காணப்படுகின்றது. ஞானம், தன்னடக்கம், வீரம் என்பவற்றை நீக்கிப்பார்த்தால் நீதி மட்டுமே மிஞ்சும், இது மற்ற எல்லா நல்லவற்றிற்கும் காரணமாயும், அவை நிலை பெறுவதற்கு நிலைக்களனாகவும், அவற்றை பாதுகாப்பதாகவும் நீதி உள்ளது எனப் பிளேட்டோ குறிப்பிடுகின்றார். மனிதனது கடமையாகவும் விதியாகவும் அமையும் பிளேட்டோ பேசும் நீதி பற்றிய அரசியல்சார் மெய்யியல் பார்வையினை ஒப்பீடு, பகுப்பாய்வு, விமர்சனம் போன்ற ஆய்வு முறைகளைப் பயன்படுத்தி ஆராய இக்கட்டுரை முனைகிறது.


திறவுச் சொற்கள் : கடமை, விதி, நீதி, அரசியல் மெய்யியல், பகுப்பாய்வு

## 1. அறிமுகம்

மெய்யியல் என்பது பரந்துபட்ட ஆய்வுப்பரப்பினைக் கொண்டதாகவும் ஞானம் பற்றிய தேடலாகவும் அமைகிறது. மனிதனுடைய சிந்தனையில் தோன்றிய அனைத்து

[1]சோ. ஜெகநாதன், சிரேஷ்ட விரிவுரையாளர். மெய்யியல் மற்றும் விழுமியங்கள் கற்கைகள்துறை கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை. மின்னஞ்சல்: *jeganathans@esn.ac.lk*

ஆய்வுத்துறைகளிலுமுள்ள உள்ளார்ந்த விடயங்களுடனும் தொடர்புபட்டு அவை தொடர்பான நியமம் கூறும் தன்மையிலான ஆய்வினை மேற்கொள்ளும் ஒரு துறையாக மெய்யியல் காணப்படுவதால் இது இரண்டாம் நிலை ஆய்வாக அடையாளப்படுத்தப்படுகிறது. விடயங்களின், பொருள்களின் மூலங்களை ஆராயும் மெய்யியல் காலப்போக்கில் சமூக முறைமைகளையும் அவை சார்ந்த கருத்துக்களையும் ஆராயத் தொடங்கியதால் அது சமூக மெய்யியலாக வளர்ச்சியடைந்தது. இச்சமூக மெய்யியலின் ஒரு பிரிவே அரசியல் மெய்யியலாகும். அரசியல் கருத்துக்கள் தொடர்பான ஒரு மதிப்பிடலாக இவ்வரசியல் மெய்யியல் காணப்படுகின்றது. அந்த அடிப்படையில் அரசியல் மெய்யியலில் பகுப்பாய்வு செய்யப்படும் மிக முக்கியமான எண்ணக்கருவாக நீதி என்ற எண்ணக்கரு காணப்படுகின்றது (ஜெகநாதன். சோ., 2018: 19). இது பகுத்தறிவு, மனச்சாட்சி என்பவற்றுடன் தொடர்புபட்ட ஒன்றாகக் காணப்படுவதுடன், சமூகப் பயிற்சி, சமூகச் செல்வாக்கு என்பனவற்றிலிருந்து தோற்றம் பெற்றதொன்றாகக் கருதப்படுகின்றது. அந்த வகையில் நீதி என்ற எண்ணக்கரு வரைவிலக்கண அடிப்படையிலும் பிரயோகத்தின் அடிப்படையிலும் சிக்கல் நிறைந்த ஒன்றாகவே காணப்படுகிறது.

## 2. ஆய்வு முறையியல்:

இவ்வாய்வு மேற்கொள்ளப்படுவது பகுப்பாய்வு விமர்சன முறையிலாகும். எடுத்துக் கொள்ளப்பட்ட பிரச்சினை சார்பாக எழுத்துருவிலுள்ள ஆக்கங்களிலிருந்து பெறப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யும் முறை இங்கு பின்பற்றப்படுகிறது. குறித்த பிரச்சினை தொடர்பாக மூல நூல்களிலிருந்தும் (Primary Sources) வழிநூல்களிலிருந்தும் (Secondary Sources) மேலதிக வாசிப்பு நூல்களிலிருந்தும் (Peripheral Reading) தரவுகள் பெறப்பட்டு இங்கு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

## 3. ஆய்வுப் பிரச்சினை

நடைமுறையில் மக்கள் நீதியே உயர்வானது என எண்ணுகின்ற போதும் அநீதியை வெறுப்பதாக சொல்லுகின்ற போதும் உண்மையில் அநீதியில் வரக்கூடிய பலாபலன்களைப் போற்றுகின்றவர்களாக உள்ளனர். அநீதி வேண்டாம் என்று சொன்ன போதும் அநீதிக்கு துணை போகின்ற தன்மையும் அநீதியை விரும்பி மக்கள் ஆதரிக்கின்ற போக்கையும் காணமுடிகிறது.

## 4. ஆய்வுக் கருதுகோள்

மக்கள் அநீதியால் வருகின்ற சௌகரிக வாழ்க்கையை ஏற்றுக்கொள்பவர்களாகவும் அநீதியால் பெறக்கூடிய பலாபலன்கள், நன்மைகளையே ஏற்றுக்கொள்பவர்களாக காணப்பட்டாலும் நீதியே நிரந்தரமானதும் எல்லோருக்கும் பொதுவானதாகவும் இருக்கும்.

## 5. ஆய்வின் நோக்கங்கள்

- அரசியல் மெய்யியலில் பேசப்படும் நீதி பற்றிய எண்ணக்கருவை விளக்குவதனூடாக நீதி பற்றிய கொள்ளைகளையும் அதன் வகைகளையும் தெளிவுபடுத்தல்.
- நீதி, அநீதியின் தன்மைகளைப் பற்றிய கருத்துக்களை எடுத்துக்காட்டுவதும் அதன் சமகால போக்கை மதிப்பிடுவதும்.
- நீதி, அநீதி பற்றிய மெய்யியல் பகுப்பாய்வின் பொருத்தப்பாட்டினை பிளேட்டோவினூடாக ஆராய்தல்

ஆகிய நோக்கங்களைக் கொண்டதாக இவ்வாய்வு காணப்படுகின்றது.

## 6. நீதி பற்றிய வரைவிலக்கணங்களும் வகைகளும்

சட்டவியல், ஒழுக்கவியல், அரசியல் முதலான துறைகளில் பேசப்படும் நீதி (Justice) என்பது நீ என்ற அடிச் சொல்லிலிருந்து தோன்றியது. இயக்குதல், வழிகாட்டுதல், செயலாட்சி, நடத்தை, தகுதி, நடுநிலைமை தவறாமை, மரபொழுங்கு, அறம் எனப் பல அர்த்தங்களில் பயன்படுத்தப்படுகின்றன. மேலும் நீதியானது செயலின் நிகழ்நிலை, கொள்கை முறை அரசியல் அறிவுத்திறன், அரசியல் சூழ்ச்சித்திறன் முதலிய அர்த்தங்களையும் கொண்டுள்ளது (ஜமாஹிர், பீ. எம்., 2010:181).

பக்கம் சாராமல் நடு நிலைமையோடு செயல்புரிவது நீதி என ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் பல்வேறு அறிஞர்களால் அவரவர் கொள்கைக்கேற்ப பல்வேறு வரைவிலக்கணங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. அந்த வகையில் சோபிஸ்டுகள் நீதி என்பது வலியவர்கள் தம் பதவிகளைக் காத்துக்கொள்ளவும், வசதிகளைப் பெருக்கிக்கொள்ளவும் அரசியல் துணையோடு அடுக்கி வைத்த சட்டங்களைப் பிறழாது பின்பற்றுவதே நீதிநெறி என்றும் அப்படிப் பின்பற்றாதவர்கள் நீதி தவறியவர்கள் என்றும் குற்றம் சாட்டப்பட்டுத் தண்டிக்கப்படுவர் என்றனர் (நாராயணன், க., 1989 : 42). நீதி தொடர்பான வாத விவாதங்கள் சோபிஸ்டுகளால் நடாத்தப்பட்ட போதும், அது ஒரு கருத்தாடல் மிக்க எண்ணக்கருவாக சோக்கிரட்டிஸினாலும் அவரது மாணவரான பிளேட்டோவாலும் எடுத்தாளப்பட்டது. பல்வேறு வாதப் பிரதிவாதங்களின் இறுதியில் பிளேட்டோ நீதி என்பது ஞானம், தன்னடக்கம், வீரம் என்பவற்றை நீக்கிப்பார்த்தால் நீதி மட்டுமே மிஞ்சும். இது மற்ற எல்லா நல்லவற்றிற்கும் காரணமாயும் அவை நிலை பெறுவதற்கு நிலைக்களானாவும் அவற்றை பாதுகாப்பதாகவும் உள்ளது என்றார் (ராமானுஜாசாரி, ஆர்., 1986: 187).

சட்டம், நீதி என்பவற்றை பின்பற்றாத மனிதன் மிருகத்தை விட மோசமானவன் எனக் கூறும் அரிஸ்ரோட்டில் நீதியால் மட்டுமே மனித சமூகத்தை ஐக்கியப்படுத்த முடியும் என்றார். நல்லொழுக்கத்தையும் தீமையையும் சிந்தித்து உணர்வதால் நல்ல அரசை உருவாக்கலாம். அதுவே அரசியல் சமூகத்தின் ஏக கொள்கையாகவும் இருக்க வேண்டும் எனவும் அரிஸ்ரோட்டில் வலியுறுத்தியுள்ளார் (Aristotle, 1941: 1129).

புனித தோமஸ் அக்குவைன்ஸ் நீதி என்பது ஒரு மனிதனிலிருந்து இன்னொரு மனிதருக்கிடையேயுள்ள உறவுப்பாலம் வாய்ந்ததாக இருக்க வேண்டும். இது மனிதர்களிடையே சமத்துவத்தை ஏற்படுத்தும் (Thomas Aquinas, 1946:1436). ஹொப்ஸின் கருத்துப்படி நீதி என்பது இறையாண்மைக்கு கீழ்ப்படிதலாகும். இறையாண்மை எதைச் செய்தாலும் அந்த இடத்தில் தடங்கல் இருக்காது இறையாண்மைக்கு அநீதி செய்பவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் (Hobbes, 1969:135). சிட்ஜ்விக்கின் (Sidgwick) கருத்துப்படி தகைமைத்துவம் தான் நீதியின் மூலத்துவமாகும். அவரவர் தகைமைக்கேற்ப வெகுமதிகள் வழங்கப்பட வேண்டும். நீதி என்பது ஒருவர் எதைப் பெறத்தகைமையுடையவரோ அதைப் பெறுவதாகும் என ஹொஸ்ட்பாஸ் கூறுகிறார். தகைமைக்கு மேலாக நீதிக்கான கட்டளைக் கல்லாக தேவையும் குறிப்பிடப்படுகிறது. தேவையே இலட்சிய அரசின் கிட்டிய மையமாகும். தேவைகளின் பகிர்வுதான் நீதியென கிரொபொட்கின் (Kropotkin) வாதிடுகிறார் (ஜமாஹிர், பீ.எம்., 2010:183,184).

இவ்வாறு நீதி பற்றி வேறுபாடுடைய வியாக்கியானங்கள் காணப்படுவதற்கு காரணம் அது பல்வேறு தளங்களில் நின்று தொழிற்படுவதனாலாகும். அந்த வகையில் நீதியின் பல்பரிமானத்தன்மையைக் கொண்டு அதன் வகைகளை அறிந்து கொள்வதும் அவசியமாகின்றது.

## 6.1 நீதியின் வகைகள்

நீதி என்பது முழுமையும் சமுதாய ஒழுங்கோடு தொடர்புபடும் எண்ணக்கருவாக இருக்கும். அதேவேளை பொதுச் சமூக ஒழுங்கிற்கு முரணான வகையில் தனிப்பட்ட நபர்களின் உரிமைகளின் வெளிப்பாடாகவும் உள்ளது. இந்த அடிப்படையில் சட்ட நீதி, சமூக நீதி எனும் இரு பிரிவுகள் பற்றிப் பேசப்படுகின்றன. இவை பெரும்பாலும் மனிதர்களின் இயந்திர வாழ்கையை கருத்திற் கொண்டு மனிதர்களால் உருவாக்கப்பட்ட நீதியாகும் (Aumann, Francis R. 1969 :13: 682-687). இதற்கு அப்பால் நீதி இறைவனால் படைக்கப்பட்டது என்ற அடிப்படையில் இயற்கை நீதி, ஒழுக்க நீதி எனும் பிரிவுகள் பற்றியும் பேசப்படுகிறன.

இயற்கை நீதி ஒப்பீட்டளவில் சிறியது ஆனால் எல்லாவற்றிற்கும் அடிப்படையானது. சட்டமுறையியல் பகுதியானது என்ற வகையில் அதனை சட்ட நீதியிலிருந்து வேறுபடுத்துகின்றனர். சிலர் இந்த இயற்கை நீதியில் மாற்றம் ஏற்படாது என்றும் சிலர் மாற்றங்களுக்கு உள்ளாகும் என்றும் கூறுகின்றனர். மெய்யியலாளர்களின் கருத்துப்படி நீதி என்பது எல்லா இடத்திலும் எக்காலத்திலும் பொதுவானதொரு அந்தஸ்தைக் கொண்டிருக்கும் அதேவேளை அவை ஒரு போதும் மனிதனை வேறுபடுத்திப் பார்ப்பதில்லை. மனிதனை அடிமைப்படுத்துவதில்லை. இயற்கையின் விளைவாக வருகின்ற யுத்தத்தில் மனிதனுக்கு மனிதன் எதிரியாகவும் நீதித்துவமற்ற ஒரு கடின வாழ்க்கையையும் வாழ்ந்து வந்தான். இயற்கை நீதியின் போதனைகள் யாவும் பகுத்தறிவின் மூலம் கண்டு கொள்ளப்பட்டவை. உதாரணம் நன்மை செய்தால்

நன்மை விளையும், தீமை செய்தால் தீமை விளையும். இயற்கையில் நீதி மட்டுமல்ல அநீதியும் உள்ளது. உதாரணமாக இயற்கை அனர்த்தங்களை கூற முடியும். இருப்பினும் மனிதர்கள் அனைவரும் சமமானவர்கள், இயற்கை நிலையிலுள்ள ஒவ்வொரு மனிதர்களுக்குமிடையிலும் ஏற்படும் போர் நீதியின் பல்பரிமானத்தை புரிந்து கொள்ளாமையே என்பது இயற்கை நீதியின் சாரமாகும் (றியால், ஏ. எல். எம்., மாஹிர், ஐ. எல். எம்., 2014: 86,87).

மனிதனால் உருவாக்கப்பட்ட சமூக நீதியானது பழமை பேணும் தன்மை, சீர்திருத்தங்களோடு தொடர்புபடுகிறது. மனிதர்களிடையே காணப்படும் தனிநபர் வேறுபாடுகள் அவர்களிடையே குழப்பங்களை ஏற்படுத்துவதோடு இறுதியில் யுத்த நிலைக்கு இட்டுச் செல்கிறது. இவற்றில் இருந்து மக்களை மீட்டெடுத்து சமத்துவத்தையும் நட்பையும் அவர்களிடையே ஏற்படுத்தி அவர்களது சந்தோசமான வாழ்க்கைக்கு வழிகாட்டுவதற்காக மனிதர்கள் ஒன்று கூடி உருவாக்கியதே சமூக நீதியாகும். அநீதி எப்போதும் ஒற்றுமையின்மையையும் மோதல்களையுமே ஏற்படுத்தும்.

மனிதன் நினைப்பது நல்லதைச் சார்ந்ததாயின் அது நடக்க வேண்டும். அதன் மூலம் பல மனித உயிர்கள் தீயவைகளைச் செய்வதிலிருந்து தடுக்கப்படும். இயற்கை மூலம் மனிதன் தீர்மானிப்பது இறைவனைப் பற்றிய உண்மையாகும். அது சமூகத்தைப் பற்றிய நியதியாகும். இறைவனுக்கும் மனிதனுக்குமான உறவு இயற்கை நீதியிலும், மனிதனுக்கும் மனிதனுக்குமான உறவு சமூக நீதியிலும் உள்ளடங்கியிருக்கிறது. மனிதனால் உருவாக்கப்பட்ட நீதி முறையில் குறிப்பிட்டுள்ள சில பொதுவானதாக இருந்தாலும் இடத்திற்கிடம் வேறுபடும் சமூக நீதிகளும் உள்ளன. இந்த அடிப்படையில் தான் நீதி பற்றிய கொள்கைகள் உருவாகின்றன.

## 7. நீதி பற்றிய கொள்கைகள்

சமகால அரசியல் சிந்தனைகளில் நீதி பற்றிய கருத்துக்கள் பல்வேறு கோட்பாடுகளினூடாக விளக்கப்படுகின்றன. தத்துவக் கோட்பாடு, மாக்ஸிசக் கொள்கை, சமூகப் பொருளாதாரக் கொள்கை, அரசியல் கொள்கை என்பவை முக்கியமானவையாகும். நீதி பற்றிய தத்துவக் கொள்கையில் நீதியானது மனித நாகரிக வளர்ச்சியின் தொடக்க காலத்தில் இருந்ததாகக் கூறப்படுகின்றது (Dudley Knowles, 2001: 225). ஒவ்வொரு சமயத்தவரும் தங்களுடைய கடவுளர்களையே நீதியின் உருவாகக் கண்டனர். பண்டைக் காலம் முதல் நீதிக்கருத்துக்களைக் கூறும் பல நூல்கள் தமிழில் எழுந்துள்ளன. இங்கு அரசியல் சார்ந்த மன்னர்கள் எவ்வாறு நடக்க வேண்டும் என்ற பல கருத்துக்கள் காணப்படுகின்றன. இதனடிப்படையில் திருக்குறள், அர்த்தசாஸ்திரம், மனுதர்ம சாஸ்திரம் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பிளேட்டோவின் குடியரசில் காணப்படும் கருத்துக்களும் இதற்குச் சார்பானதாகவே காணப்படுகின்றன. பொதுவாக தத்துவக் கொள்கையில் நீதி என்பது உண்மையோடு தொடர்பான விடயமாக அடையாளப்படுத்தப்படுகிறது.

நீதி பற்றிய இயற்கைக் கொள்கை என்பது தத்துவக் கோட்பாடுகளின் விரிவு எனக் கூறலாம். இதனை ஆதரிப்போர் நீதியினை உண்மைநெறி வாய்ந்த கொள்கை எனக் கூறுவர். இயற்கையோடு ஒத்துவாழ்கின்ற எண்ணத்தை வலியுறுத்துகின்றதும் இக்கொள்கை இயற்கையில் சமயச் சார்பான அம்சங்களில் இயற்கையோடு ஒத்த அடிப்படையில் மக்களின் வாழ்வை அமைப்பதற்கும் முனைகிறது. நவீன உலகிலும் சட்டங்கள் இயற்கை விதிகளோடு முரண்படக் கூடாது என்பதில் அதிக கவனம் செலுத்தப்படுகின்றது. அதாவது இயற்கைச் சட்டமே உயரியது என்றும் ஏனைய சட்டங்கள் யாவும் அந்தச் சட்டத்துடன் இயைந்ததாகவே இருக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. இந்த உயரிய இயற்கைச் சட்டத்திலிருந்துதான் பின்நாளிலே சார்வதேச சட்டமும், மனித உரிமைச்சட்டமும் முளைத்தன என்பது குறிப்படத்தக்கது. ஐரோப்பிய சிந்தனையில் இயற்கைச் சட்டத்திலிருந்து நீதி கிடைக்கின்றது. எனவே நீதியானது இயற்கையோடு ஒத்தவகையில் நீதியும், இயற்கையும் ஒன்றிலிருந்து ஒன்று முரண்படாவண்ணம் அமைந்து காணப்படுகின்றது (தமிழ்மாறன், வி.ரி., 1998, : 128,129).

மார்க்ஸிச விளக்கத்தின்படி தொழிலாளர் நலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதாக இக்கொள்கை அமைந்துள்ளது. அறிவியல், சமத்துவம் சமுதாயத்தில் நிலவச் செய்வதற்காகவே நீதித்துறை இருக்க வேண்டுமென மாக்ஸ் கூறுகின்றார். பாட்டாளி மக்களின் ஆட்சியில் அறிவியல் சமதர்மக்கொள்கையை நிறைவேற்றவும், பாதுகாக்கவும் நீதிமன்றங்கள் இருக்கவேண்டும். எனவே மக்களின் சுதந்திரத்தை ஆதரிப்போர் சுதந்திரமான எவ்வித கட்டுப்பாடுமில்லாத நீதிமன்றத்தை விரும்புகின்றனர். எனவே மார்க்ஸிச சிந்தனையாளர்கள் நீதி என்பது தனிமனிதனுக்கு தேவையான ஒன்று என வலியுறுத்துகின்றனர்.

நீதி வழங்குவதற்கு சமூக, பொருளாதார நிலைகளும் எடுத்துக்கொள்ளப்பட்டன. சமுதாயம் நலனுடன் காணப்படவேண்டுமாயின் அங்கு வாழும் தனிமனித உரிமைக்கும், சமுதாய நலனுக்குமிடையே கருத்து வேறுபாடு இல்லா நிலையும் ஒற்றுமையுணர்வும் இருத்தல் வேண்டும். இவை இரண்டிற்குமிடையே பிணக்குகள் ஏற்படுமாயின் தனிமனித உரிமைகள் தோல்வியுறும். சில நாடுகளில் சமுதாயநீதி அதிகரித்தும் சில நாடுகளில் குறைவடைந்தும் காணப்படுகின்றன. அந்தவகையில் சமூகநீதி என்ற பதம் அண்மைக்காலங்களில் இந்திய நீதித்துறையினர் மத்தியில் பிரபல்யமாகி வருவதை கவனத்தில் கொள்ளலாம் (தமிழ்மாறன், வி.ரி.,1998,:129). பிளேட்டோவின் குடியரசிலும் சமூகநீதி பற்றிக் குறிப்பிடப்படுகின்றது. சமுதாய நீதியுள்ள இடத்தில் ஒரு வகுப்பார் மற்றொரு வகுப்பாரை சுரண்டுவதை அல்லது ஒரு இனம் மற்றொரு இனத்தை சுரண்டுவதை தடுக்கமுடியும். பொதுவாக சமுதாய நீதியுள்ள நாட்டில் சமூகங்களுக்கிடையே நல்லிணக்கம் காணப்படும்.

சமூக நீதியுடன் பொருளாதார நீதியினையும் முக்கியத்துவப்படுத்தப்படுகின்றது. அதாவது பொருளாதார ரீதியாக மனிதனுக்கு மனிதன் எவ்வித வேறுபாடும் காட்டாமல் இருப்பதே பொருளாதார நீதியாகும். பொருளாதார நீதியை மக்களுக்கு

இட்டுச்செல்வதனையே அரசு குறிக்கோளாகக்கொண்டு திட்டங்களை வகுக்கும்போது மக்களுடைய பொருளாதாரம் பாதிக்கக்கூடாது எனக்கூறுகின்றது.

சுதந்திரமாகவும், நேர்மையுடனும் அரசியல் வாழ்வில் மக்கள் தங்களை ஈடுபடுத்திக் கொள்வதனையே அரசியல் நீதி எனக்குறிப்பிடப்படுகின்றது. மக்கள் சுதந்திரமாக அரசை அமைக்க விரும்பினால் அந்நிலமை அரசியல் நீதியாகக் கொள்ளப்படும். மாறாக மக்களால் அவ்வாறு செய்ய முடியாத போது அதனை நாம் அரசியல் நீதி இன்மை எனக்கொள்கிறோம். ஒரு அரசாங்கத்தின் சிறப்பான இயக்கத்திற்கு நீதித்துறையின் சுதந்திரமும், பாரபட்சமற்ற நீதி நிர்வாகமும் அவசியமாகும். இதனடிப்படையில்தான் ஜனநாயக நாடுகளில் அவற்றின் அரசியல் திட்டங்களை வரைந்தோர் நீதித்துறை அரசியல் தலையீடுகளின்றி இயங்க வேண்டுமென்பதில் கவனம் கொண்டு நீதித்துறையினை மற்றைய துறைகளினின்றும் பிரித்து அமைத்துள்ளனர் (சிவராஜா, அ., 2008:132,133). எனவேதான் ஜனநாயக ஆட்சிமுறையில் அனைவருக்கும் வாக்குரிமை, சட்டத்தின் முன் அனைவரும் சமம் எனப் பல உரிமைகளை மக்கள் பெற்றுள்ளனர். இதுவே அரசியல் நீதி எனப்படுகிறது. நீதி பற்றிய கொள்கைகளின் அடிப்படையில் நோக்கும் போது ஒரு நாட்டில் நீதியான ஆட்சி நிலவும் போது அங்கு அமைதியான சூழ்நிலை நிலவுவதனைக் காணலாம். ஆனால் நீதி இல்லாத போதே வன்முறைகளும், முரண்பாடுகளும், நல்லிணக்கம் இன்மையும் ஏற்படும். அநீதியின் ஆட்சியில் மக்களாட்சி தோற்றம் பெறாது.

அரசியல் மெய்யியலில் நீதி பற்றிய ஆய்வில் நீதியை பின்பற்றாமை அநீதியாகும். அந்த அநீதிக்கு வழங்கப்படுவது தண்டனையாகும் எனவே அநீதியும் தண்டனைகளும் நீதியின் உள்ளடக்கத்தில் பேசப்பட வேண்டியதாகின்றது.

## 8. அநீதியும் தண்டனைகளும்

அநீதி என்பது நீதிக்கு எதிர்மறையானது. பொதுவாக நீதி என்பது தயாள குணம், இரக்க குணம், கீழ்ப்படிதல் போன்ற நல்ல பண்புகள் எனவும் இவற்றிக்கு மாறாக இருக்கும் கோபம், நயவஞ்சகம், சூழ்ச்சி போன்ற தீய பண்புகள் அநீதி எனவும் கூறப்படும். சில சந்தர்ப்பங்களில் நீதியானது அநீதி போல் தென்படும். அவ்வாறே அநீதியானது நீதி போல் தென்படுகிறது. உதாரணமாக பைத்திய வெறி பிடித்த ஒருவன் தான் தந்த கத்தியை தரும்படியும் அக்கத்தியால் ஒருவரை கொலை செய்யப்போவதாகவும் கூறிக்கொண்டு கொடுத்தவரிடம் கத்தியை கேட்டால் அவர் கத்தியை கொடுப்பது நீதியா? கொடுத்ததை கேட்கும் போது கொடுப்பது நீதியாகும். கொடுக்காமல் இருப்பது அநீதியாகும் இந்த சந்தர்ப்பத்தில் கொடுக்காமல் இருப்பதே நீதியாகும்.

ஒரு சட்டம், நீதி பற்றிய ஒழுக்க ரிதியான கருத்துக்களை பூர்த்தி செய்யத் தவறுவது அநீதி என அழைக்கப்படலாம். சட்டத்தின் பிரயோகமானது சட்ட ரீதியான முறைமைகளின் செயல் முறைகளினால் வேண்டப்படுகின்ற சரியான நியமங்களை பூர்த்தி செய்வதற்கு தவறுவதன் மூலம் அநீதியானது என விமர்சிக்கப்பட முடியும்

(Raphael, D.D., 1992 : 124). அங்கு மெய்யியலாளர்களிடையே எழும் பிரச்சினை என்னவென்றால் நீதியை அநீதியிலிருந்து பிரித்தறிவதற்கு ஏதாவது கட்டளைக்கற்கள் உள்ளனவா? என்பதாகும். சாதாரண மக்கள் அநீதியை கடிந்து கொண்டாலும் அல்லது அவர்கள் அநீதியை வெறுப்பதாக கூறிக்கொண்டாலும் உண்மையில் அநீதியில் வரக்கூடிய பலாபலன்களைப் போற்றுகின்றவர்களாக உள்ளனர். இதுவோர் முரண்பாட்டைக் காட்டுகிறது. அநீதி வேண்டாம் என்று சொன்ன போதும் அநீதிக்கு துணை போகின்ற தன்மையும் அநீதியை விரும்பி மக்கள் ஆதரிக்கின்ற போக்கையும் காணமுடிகிறது (அனஸ் எம். எஸ். எம்., 2003 : 117).

சட்டவியலைப் பொறுத்த வரையில் அநீதி இடம் பெற்றுள்ளது என சாட்சியங்கள் மூலம் நிறுவப்பட்டால் அது தண்டனையை விதிக்கும். சமூக மேம்பாட்டிற்காகவும் நாட்டின் ஒருமைப்பாட்டிற்காகவும் சட்டங்கள் இயற்றப்படுகின்றன. சமூக அமைப்புக்கள் சங்கங்கள், கழகங்கள், அரசாங்கம் போன்றவை சட்டங்களை இயற்றினாலும் அரசாங்கமே அதிகாரம் மிக்க சட்ட நிறுவனமாக விளங்குகிறது. இச்சட்டங்களை மீறுவது குற்றம் (அநீதி). அதற்கு வழங்கப்படுவது தண்டனையாகும் (Dudley Knowles, 2001: 184). அநீதியின் தன்மையை பொறுத்து தண்டனையின் தன்மை அமைவதனால் பல்வேறு தண்டனைக் கொள்கைகள் உருவாகின்றன. அந்த வகையில் பழிக்கு பழிவாங்கும் தண்டனைக் கொள்கை, எச்சரிக்கை தண்டனைக் கொள்கை, சீர்திருத்த தண்டனைக் கொள்கை, தடுப்புத் தண்டனைக் கொள்கை, மரண தண்டனைக் கொள்கை முதலானவற்றைக் குறிப்பிடலாம். ஆனாலும் எல்லா விதமான குற்றச் செயல்களுக்கும் இக் கொள்கைகள் மூலம் தண்டனை கொடுக்க முடியாமையும், குற்றவாளியை மாதிரியாக பயன்படுத்தி அளவுக்கு மீறிய தண்டனை கொடுப்பதும், நாட்டுத் தலைவரினால் பொது மன்னிப்பு வழங்கப்படுவதும் இத் தண்டனைக் கொள்கையின் பலவீனத்தையும் இறுதியில் அநீதிக்கே வழிகாட்டும் தன்மையில் அமைந்தும் விடுகின்றன.

சமூக ஒழுக்கவியலின் அத்திவாரமாக நீதி காணப்படுகிறது. அதற்காக நீதிதான் முழுக்க முழுக்க சமூக ஒழுக்கவியல் எனக் கூற முடியாது. நீதிக்கு அப்பாற்பட்டதாக கருதும் இரக்ககுணம், தயாளகுணம் என்பவற்றோடு சம்பந்தமானதாகவும் நீதியைக் காட்டமுடியும். ஒழுக்கம் சமபந்தமான உரிமைகள் பற்றிய எல்லா விடயங்களையும் நீதி உள்ளடக்கி இருக்கும் எனக் கூறமுடியாது. நீதியின் கட்டுப்படுத்தல் முறையானது ஒழுக்க முறைகளை பாதுகாக்கும் சரியான முறையாக கூறமுடியாது. இது நன்மையை ஏற்படுத்தலைக் காட்டிலும் அதிக தீமையை ஏற்படுத்திவிடும்.

அநீதிக்காக வழங்கப்படும் தண்டனை பாதிக்கப்பட்டவர்களுக்கு திருப்தி கொடுக்கின்ற விடயம் அல்ல. பாதிக்கப்பட்டவர் என்ன அளவான தாக்கத்தைப் பெற்றாரோ அதே அளவான சேதம் அல்லது இழப்பினை கோருகின்ற போது அவர் அக்குற்றத்தை மீண்டும் செய்கின்ற மாதிரி ஆகிவிடும். அதுமட்டுமல்லாமல் தண்டனையானது முழு சமூகத்தின் நன்மைக்காக ஒழுங்கமைக்கப்பட்ட சமூகத்தின் அதிகார வர்க்கத்தினாலும் விதிக்கப்படுகிறது.

பொது ஒழுங்கின் மீறுகையானது நீதியின் மீறுகையாகக் கருதப்படுகின்றது. மீறுகைக்கான தண்டனைகள் நீதியின் பெயரில் நியாயப்படுத்தப்படுகின்றன. குற்றவியல் சட்டம் சிறப்பாக சமூக ஒழுங்கமைப்பினைப் பாதுகாப்பதற்கு வடிவமைக்கப்பட்டுள்ளது. குற்றத்திற்கான தண்டனையானது தனியே குற்றச் செயலில் பலியானவருக்கு (பாதிக்கப்பட்டவருக்கு) திருப்பிக் கொடுக்கும் விடயம் மாத்திரமல்ல அத்தோடு சமூக ஒழுங்கினைப் பாதுகாக்கின்ற ஒன்றாகவும் உள்ளது (Raphael, D.D., 1992 : 135). இவ்வாறாக அரசியல் மெய்யியல் பகுப்பாய்விற்கு உட்படுத்திய நீதி என்ற எண்ணக்கருவின் உள்ளடக்கம் எந்தளவிற்குப் பிளேட்டோ பேசும் நீதியில் உள்ளடங்கியுள்ளது என்பதனை பார்க்க வேண்டியுள்ளது.

## 9. பிளேட்டோ பேசும் நீதி

நீதி பற்றிப் பேசும் போது பிளேட்டோவை உதாரணம் காட்டாமல் யாருமே இல்லை என்ற அளவிற்கு மிக ஆழமான ஆய்வை நிகழ்த்தியவர். கி.மு 429-348 கிரேக்கத்தில் பிறந்த இவர் சோக்கிரட்டிஸின் மாணவன் ஆவார். இவரின் படைப்புக்களில் குடியரசு தலையாயது. குடியரசின் தோற்றத்திற்கு சோக்கிரட்டிஸின் மரணதண்டனை நேரடிக் காரணமாக அமைந்தாலும் அக் கால ஆட்சி முறையில் ஏற்பட்ட வெறுப்பு அக்காலத்தில் உலகின் பல நாடுகளிலும் நிலவிய ஆட்சிமுறை போன்ற பல காரணங்கள் அடிப்படையாக அமைந்தன.

பிளேட்டோவின் நிறைவான அரசு பற்றியதான குடியரசு நூலைப் புரிந்து கொள்ள அவர் காலத்தில் வாழ்ந்த மக்களுக்கு கூடிய தகைமை இருக்கவில்லை. எனினும் அரசியல் மெய்யியலில் அவர் ஆழமாக ஈடுபட்டார். கிரேக்க மக்களுக்கு பழமை போற்றும் தன்மையில் ஏற்பட்ட நம்பிக்கை அளவில் வளர்ச்சி ஏற்படத் தொடங்கியது. இத்தகைய வளர்ச்சியில் குதர்க்கம் பேசும் மக்கள் தன்னம்பிக்கையையும் இழந்துவிட்டனர். இந்நிலையில் ஒரு சரியான நம்பிக்கையையினையும் அரசியல் முறையினையும், வாழ்க்கை நியதியினையும் உருவாக்க வேண்டிய தேவையை பிளேட்டோக்கு ஏற்பட்டது.

குடியரசின் முதலாவது புத்தகத்தில் சோக்கிரட்டீஸை கதாநாயகனாகக் கொண்டும் வேறு சில பாத்திரங்களான செபாலசு, தொராக்சிமார்க்ஸ், கிளக்கோன் ஆகியோர் நீதி தொடர்பாகக் கொண்டிருந்த கருத்துக்களில் காணப்படும் தவறுகளை சுட்டிக்காட்டியும் உண்மையான நீதி எது? என்பதை கூற விளைக்கின்றார் பிளேட்டோ. நீதி பற்றிக் கூறும் போது சமுதாய அரசியல் ஒழுக்கத்திற்கேற்ப மக்களிடையே நிலவும் இணக்கமான தொடர் உறவு என்றார். இங்கு சோக்கிரட்டீஸ் விசாரணையாளராகவும் ஏனையவர்கள் பதிலளிப்பவர்களாகவும் உள்ளனர்.

செபாலசு ‘‘அவரவர் கடனை அவரவரிடம் கொடுப்பது நீதி’’ என்றார். இதற்கு எதிர்வாதம் செய்யும் சோக்கிரட்டீஸ் பைத்திய வெறிபிடித்த ஒருவன் தான் கொடுத்த ஆயுதத்தைத் தரும்படியும் இவ்வாயுதத்தால் ஒருவனை கொலை செய்யப்போவதாகவும் கூறினால் அவ்வாயுதத்தை அவனிடம் கொடுக்கலாமா? எனக்

கேட்பதன் மூலம் செபாலசுவின் கருத்தைக் கேள்விக்குள்ளாக்கினார். செபாலசுவின் வழித்தோன்றல்களான பாலிமார்க்கஸ், ஸைமனிடீசின் ஆகியோர் நீதி என்பது நண்பர்களுக்கு நன்மை செய்யவும் பகைவர்களுக்கு தீமை செய்தலுமே என்பர் (சாமிநாத சர்மா,வெ., மொ.பெ 1985:118). இதனைத் தர்க்க ரீதியாக எதிர்வாதம் செய்தும் மறுக்கின்றார். அதாவது எல்லா நண்பர்களும் நண்பர்களல்ல. நண்பர்களுள் கெட்டவர் இருப்பது போல் பகைவர்களிலும் நல்லவர்கள் இருப்பர் என்றார். மேலும் திராஸிமார்க்கஸ் "பலம் தான் நீதி என்றார்". அதிகாரமுள்ளவர்கள் சட்டத்தை ஆக்குவதும் அச்சட்டங்களுக்கு அடிபணிவதும் நீதியாகும். அதாவது பலசாலிகளின் விருப்பத்தை நிறைவேற்றுவது நீதி என்றார். இதற்கு சோக்கிரட்டீஸ் மல்யுத்த வீரர் மாட்டிறைச்சி உண்பதையே விரும்புகின்றான். அவனது விருப்பம் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதற்காக நாம் அனைவரும் மாட்டிறைச்சியை உண்ண வேண்டுமா? என வினவுதன் மூலம் திராஸிமார்க்ஸன் கருத்தை நிராகரிக்கின்றார்.

தமக்கு தீங்கு செய்தவர்களுக்கு நாம் தீங்கு செய்தால் அநீதியாகுமா? என்ற ஒரு வினா சோக்கிரட்டீஸின் உரையாடலில் இடம்பெறுகின்றது. அதற்கு விடையளிக்கும் சோக்கிரட்டீஸ் நாம் யாருக்காக தீங்கு விளைவித்தாலும் நாம் கெட்டவர்களாக மாறுகின்றோமே தவிர நல்லவர்களாக மாறுவதில்லை. ஒரு நீதிமானால் நீதியைக் கொண்டு மனிதர்களை அநீதிமான்களாக மாற்றமுடியாது என்றார். அநீதியினுடைய ஒழுக்கமற்ற தன்மை, அநீதியாளரின் தீய செயல்கள், இதன் மூலம் அவன் அறிவிலியாகவும் கெட்டவனாகவும் விளங்கும் தன்மையை எடுத்துக்கூறி அநீதிக்கு ஒரு சக்தி இருக்கின்றது. அ∴து என்னவென்றால் எங்கெல்லாம் அது பிரவேசிக்கின்றதோ அங்கெல்லாம் அது பிணக்கையும் சச்சரவையும் உண்டு பண்ணும் ஆற்றல் உடையது. இதனால்தான் நீதியாக நடக்கின்றவன் சந்தோசத்துடனும் அநீதியாக நடக்கின்றவன் துக்கத்துடனும் வாழ்க்கையை நடாத்துகின்றான் (சாமிநாத சர்மா,வெ., மொ.பெ 1985:148-150).

நீதி பற்றி இறுதி முடிவு எட்டப்படா நிலையில் அவரது முதலாவது புத்தகம் முடிவடைகின்றது. நீதியோடு தொடர்புபட்ட வகையில் நீதி பற்றியும், அநீதி பற்றியும் ஏன் தெரிந்து கொள்ள வேண்டும்? நீதிமானுடைய இலட்சணம் என்ன? நீதி ஒன்றாயினும் அநீதி பலவகைப்பட்டது. முதலிய பல விடயங்கள் பிளேட்டோவின் இரண்டாவது, மூன்றாவது, நான்காவது புத்தகங்களின் சாராம்சமாக அமைகின்றது. மேலும், அநீதி பற்றிய ஒரு விரிவான ஆய்வினைக் பிளேட்டோ மேற்கொள்கின்றார்.

## 10. பிளேட்டோ பேசும் அநீதி

நீதி என்பது ஆன்மாவின் சிறப்பன்று எனவும் அநீதி என்பது ஆன்மாவின் குறையென்றும் கூறப்பட்டுள்ளது. ஆதலால் அறமுடைய ஆன்மாவும் அறநெறியாளனும் நல்ல வாழ்க்கை நடத்துவர் எனவும் அநீதியாளன் தீயவாழ்வு நடாத்துவான் எனவும் கூறலாம். ஆகவே நல் வாழ்வு நடத்துபவன் அருளும், இன்பமும் பெற்றவன். தீயவாழ்வு நடத்துபவன் துன்புறுவான் எனலாம். நீதியாளன்

இன்புற்றிருக்கும் போது அநீதியாளர் துன்புறுவர். ஆதலால் நீதியை விட அநீதி என்றும் பயனுடையதாக இருக்க முடியாது.

வேறு எதனாலும் நிறைவேற்ற முடியாத குறிக்கோள்கள் ஆன்மாவிற்குண்டு. எடுத்துக்காட்டாக கண்காணித்தல், ஆணையிடல், எண்ணிப் பார்த்தல் இவையெல்லாம் ஆன்மாவின் தனித் தொழில்கள் ஆகும். ஆன்மாவின் நோக்கங்களில் ஒன்றாக வாழ்க்கையும் வைத்து எண்ணப்படுகின்றது. மேலும் ஆன்மாவிற்கு ஒரு சிறப்புப் பண்பு உண்டு. அதை இழந்த போது ஆன்மாவால் தன் நோக்கங்களை நிறைவேற்ற முடியாது (ராமானுஜாசாரி, ஆர்., 1986: 9,10). எனவே தீய ஆன்மா தீய தலைவனாயும் கண்காணிப்பாளனாயும் நல்ல ஆன்மா அவசியம் நல்ல தலைவனாயும் இருக்கும்.

மனிதன் மனமுவந்தோ தனக்கு நீதி நன்மை பயக்கும் என்று எண்ணியோ நீதிவழி நடக்கவில்லை. நிப்பந்தம் காரணமாகவே அவன் நீதிவழி நடக்கின்றான். எங்கு ஒரு மனிதன் தான் அச்சமின்றி அநீதி புரியலாம் என்று எண்ணுகின்றானோ அங்கு அவன் அநீதியாளனாகின்றான். எல்லா மனிதரும் நீதியை விட அநீதியே இலாபகரமானது என்று இதயபூர்வமாக நம்புகின்றனர். யாதொரு தீங்கும் செய்யாமலும் பிறர் பொருளை தொடாமல் இருப்பவர்களை அறிவிலி என்றே கூறுவர். எனினும் நேரில் காணும் போது அவனைப் புகழ்ந்து பேசுவர். தமக்கு அநீதி இழைக்கப்படுமோ என்று அஞ்சி ஒருவொருக்கொருவர் வெளிப்படையாக நல்லபடி நடந்து கொள்வர்.

அநீதியின் உச்ச நிலை எதுவென்றால் ஒருவன் நீதிவழி நடக்காத போதும் நீதியாளனாகக் கருதப்படுவதாகும். அதாவது அநீதியாளன் அநீதி புரிகின்ற போது நீதிமான் என்ற பெரும் புகழைப் பெற்றுவிட்டதாக ஒப்புக்கொள்ள வேண்டும். அநீதிமான் தவறி நடந்தாலும் மீண்டு வருவதற்குரிய ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். அவனது செயல்கள் ஏதாவது வெளிப்பட்டால் அவற்றை மறைக்க திறம்படப் பேசும் ஆற்றல் பெற்றிருக்க வேண்டும். தன்னுடைய துணிவு, வலிமை, செல்வத்தின் திறன், நண்பனின் பலம் ஆகியவற்றைக் கொண்டு தன் காரியத்தை சாதிக்கும் சக்தி பெற்றிருக்க வேண்டும்.

அநீதியாளனுடன் ஒப்பிடும் போது நீதியாளன் எதிலும் இழந்தவராகவே இருக்கிறார். தனியார் ஒப்பந்தங்களில் முறையற்றோர் முறையானவர்களுடன் கூட்டாக இருப்பின் ஒப்பந்தங்கள் முறிக்கப்படும் போது நீதியாளன் பாதிக்கப்படுவதையும் அநீதியாளன் அதிக இலாபம் பெறுவதையும் காணலாம். அதேபோன்று அரசாங்கத்திற்கு வரி செலுத்தும் வேளையிலும் கூட இருவரும் ஒரேயளவு வருமானத்தை பெறினும் நீதியாளன் மிகுதியாகவும் அநீதியாளன் குறைவாகவும் வரி செலுத்துவதைக் காண்கிறோம். அரசிடமிருந்து நீதியாளனைவிட அநீதியாளனே அதிகம் சலுகைகளைப் பெறுகின்றான். நீதியினின்று வழுவாத ஒருவன் அலுவலகத்தில் பொறுப்புள்ளவனாகவும் சொந்த அலுவல்களைப் புறக்கணிப்பவனாகவும் வேறு சில இழப்புக்களைப் பெறுவதுடன், பொது மக்களிடமிருந்து எதுவும் பெறுவதில்லை. நண்பர்களானாலும் அவர்களது விருப்பத்திற்கேற்ப சட்டங்களுக்கு புறம்பாக

நடக்காததால் வெறுப்புக்குள்ளாகின்றான். ஆனால் அநீதியாளனின் வாழ்க்கையில் இவை அனைத்தும் அப்படியே மாறுகின்றன. எனவே நீதியை விட அநீதியே சிறந்தது.

ஒரு நீதியாளன் மற்ற நீதியாளனிடம் இருந்து சுயநலம் அடைய முயற்சிக்கமாட்டான். இவ்வாறே அவன் நெறி புரண்டு செல்லவும் முயற்சிக்கமாட்டான். அநீதியாளனை விட சில பலன்களை பெற வேண்டும் என்ற முயற்சியை அவன் நீதியானது என்று கருதுவானா? அநீதியானது என்று கருதுவானா? என வினவும் போது நீதியாளன் அதை நீதி என கருதி அந்நன்மைகளை அடைய முயலுவான். ஆனால் அது அவனால் முடியாது என கூறப்படுகிறது. இங்கு முடியுமா? முடியாதா? என்பது பற்றி பிரச்சினை இல்லை. நீதியாளன் அநீதியாளனை விட பயன்களை அதிகமாக பெற வேண்டும் என விரும்பவும் உரிமை கொண்டாடவும் முற்படுவானா எனக் கேட்டால் ‘‘ஆம்’’ என்றே பதிலளிக்க வேண்டி இருக்கும். அநீதியாளனும் நீதியை விட உயர்ந்ததை செய்வதாகவும் நீதியாளனை விட அதிக நலன்களை உடையவனாகவும் சொல்லிக்கொண்டிருக்கின்றான். ஏனெனில் எல்லா மனிதர்களைக் காட்டிலும் அதிக நன்மை பெற்று இருப்பவனாக அவன் கருதினான்.

அறிவு, அறியாமையை வைத்தும் நீதி, அநீதி பற்றிய பகுப்பாய்வு அமைகிறது. அறிந்தவன் அறிவாளி, அறிவாளி நல்லவன் அப்படியானால் அறிவுடையவன் நல்லவன். தம்மை ஒத்தவர்களை விட மிகுதியாக பெற விரும்பமாட்டாதவனுமாவான். ஆனால் தம்மில் நின்று வேறுபட்டவரையும், தம் ஒத்தார் அல்லாதவரையும் விட அதிகமாக பெற விரும்புவான். அநீதியாளன் தன் ஒத்தார், தன்னிலும் வேறுபட்டார் ஆகிய இருவரையும் விட மேற்செல்ல விரும்புகிறான். எனவே நீதியாளன் அறிவுடையவனையும் நல்லவனையும் ஒத்தவன். அநீதியாளனோ தீயவனையே அறிவிலிகளையும் ஒத்தவன். அதன் விளைவாக நீதியாளன் அறிவுடையவனாகவும் நல்லவனாகவும் ஆகின்றான். அநீதியாளனோ தீயவனாகவும் அறியாதவனாகவும் ஆகின்றான். நீதி என்பது நல்ல பண்பு ஞானம் ஆகும் எனவும், அநீதி என்பது அறியாமையும் ஆகும் எனவும் ஒப்புக் கொள்ளல் வேண்டும் (ராமானுஜாசாரி, ஆர்., 1986: 47,48).

நீதியை விட அநீதி வலிமை வாய்ந்தது எனவும் சக்தி வாய்ந்தது எனவும் சொல்லப்பட்டது. அநீதி என்பது அறியாமை எனவும் நீதி என்பது பண்பு, விவேகம் ஆகிய இரண்டும் எனவும் நீதியே அநீதியை விட வலிமை வாய்ந்தது எனவும் கண்டறியப்பட்டது. அநீதி நேர் நிலையில் செயல் புரிய முடியாததால் அது வேற்றுமையையும், பிளவையும், சண்டையையும் உண்டாக்கின்றது. நீதி நேர் நிலையில் செயல் புரிவதனால் ஒற்றுமையையும் நட்பையும் அது உண்டாக்கின்றது.

அநீதி இருவருக்கும் மட்டும் இடையே காணப்பட்டாலும் சரி அவர்களுக்குள்ளும் முரண்பாட்டை உருவாக்கி பகைவராக்கிவிடும். அநீதி ஒரே மனிதன்பால் இருப்பதாக வைத்துக்கொண்டால் அது தன் இயல்பாற்றலை இழந்துவிடுமா? அல்லது இழக்காதா? என்ற வினா எழுகின்றது. அநீதியின் சக்தி எங்கிருந்தாலும் அது சக்தியை இழக்காது. நகரில் இருந்தாலும், போர் படையில் இருந்தாலும், குடும்பத்தில் இருந்தாலும்

அல்லது வேறு எந்த இயக்கத்தில் இருந்தாலும் அங்கு எல்லாம் புரட்சியை ஏற்படுத்தி அமைதியை இழக்கச்செய்துவிடும். அநீதி தனக்கே பகைமையாகவும் தன்னை எதிர்தவர்களுக்கு எல்லாம் எதிரியாகவும் மாறிவிடும் (ராமானுஜாசாரி, ஆர்., 1986: 51).

சுய அந்நியமாதல் (Self Alienation) ஏற்படுத்தி நீதியாளனுடன் பகைமையாகும் அநீதியாளனை விட நிச்சயமாக நீதியாளர்கள் அறிவுடையவர்கள். நல்லவர்கள் தகுதியுடையவர்கள் எனவும் அநீதியாளன் கூடிச் செயலாற்ற இயலாதவர்கள் எனவும் கூறும் பிளேட்டோவின் கருத்தை நாம் சற்றுக் கட்டவிழ்த்துப் பார்க்கவும் வேண்டியுள்ளது. அநீதியாளனைப் பற்றி கூறிய கருத்துக்கள் அனைத்தும் உண்மையல்ல. ஏனெனில் அவர்கள் பரிபூரணமாக தீயவர்களாக இருந்திருந்தால் தமக்குள்ளே ஒருவரை ஒருவர் பிணங்கி நின்றிருப்பர். ஆனால் சிறிதளவு நீதி அவர்கள் பால் இருக்கவேண்டும் என்பது வெளிப்படையாகின்றது. அப்படி இல்லாமல் இருந்திருந்தால் அவர்கள் தமக்குள்ளே வேறுபட்டு நின்று தம் அநீதிக்கு ஆட்பட்டவர்களையும் கொடுமைப்படுத்தியிருப்பர். ஏனெனில் முற்றிலும் கொடிய மனமுடையவர்களாகவும் அநீதியாளர்களாகவும் இருந்தால் முற்றிலும் வினை செயல் வகையின்றி இருந்திருப்பர். இதுதான் இந்த விடயத்தில் உள்ள உண்மை. அநீதியாளர்களைவிட நீதியாளர்கள் நல்லவர்கள் என்றால் அவர்கள் இனிய வாழ்க்கை நடத்துகின்றனரா? என்பது விமர்சன ரீதியாக அவதானிக்க வேண்டிய மற்றுமொரு விடயம்.

அநீதியாளன் கூட பெரிய ஒரு சமூகத்துடன் இணங்கி இயங்கும் ஒரு தன்மை இல்லாவிட்டாலும் சமுதாயத்தினுடைய ஒரு சிறு பகுதியினரோடாவது இணைந்து இயங்குபவனாக இருப்பான். இதற்கு எடுத்துக்காட்டாகக் ஹிட்லரைக் கூறலாம். இவர் உலக சமுதாயத்திற்கு அநீதியாளராகக் காணப்பட்டாலும் அவன் நாட்டு மக்கள், அவனது இராணுவம் என்னும் சிறு பகுதியினர் ஊடாக இணைந்து இயங்கும் தன்மையைக் கொண்டிருக்கின்றான். இதன் காரணமாக மாபெரும் உலகப் போரினைக் கூட நிகழ்த்த முடிந்தது.

ஆன்மாவின் நீதி என்ற பிளேட்டோவின் கருத்தானது சமூகத்தின் நீதி என்ற கருத்தோடு முக்கியப்படுகிறது. ஆன்மாவில் உள்ள வேறுபட்ட கூறுகளுக்கு இடையே உள்ள ஒருங்கிசைந்த ஒழுங்கானது நீதியாக இருக்கும் அதேவேளை சமூகத்தில் வேறுபட்ட வகுப்புக்களுக்கு இடையே காணப்படும் இக்கருத்து உயர் குடியாட்சிக்கு முக்கியத்துவம் வழங்குவதாய் உள்ளது. ஆனால் பிளேட்டோவின் நீதி பற்றிய கருத்து முழுக்க முழுக்க உயர் குடியாட்சியை தெளிவுபடுத்துகிறது எனக்கூறமுடியாது. மனச்சாட்சியின் அதிகாரம் தனிநபர் மதிப்பீடு என்பவைகள் முக்கியம் பெறுகின்றன. ஒழுக்கத்துறையிலும் சமயத்துறையிலும் தனிநபர்களுடைய மனச்சாட்சியின் அதிகாரத்திற்கு முக்கியத்துவம் கொடுத்ததன் விளைவாக தனிநபர் வாதம் சமூக அரசியலில் விரைவாகப் பரவியது.

பிளேட்டோவின் அரசியல் மெய்யியலில் அடிப்படை நோக்கம் இலட்சிய அரசு ஒன்றை உருவாக்குவது. அந்த இலட்சிய அரசினை விளக்கும் போது தான் அவர் நீதி என்ற எண்ணக்கருவினை ஆழமாக எடுத்தாண்டார். ஆனால் அவரது இலட்சிய அரசு என்பது உலகில் எங்கேயுமே காணமுடியாதாகவும் நடைமுறைக்கு சாத்தியமற்றது என்ற அடிப்படையில் அவரது நீதி தொடர்பான கருத்துக்கள் முழுமையும் ஏற்புடையதா? என்ற விமர்சனத்துகுள்ளானது. நீதியை உருவாக்குவதன் மூலம் தனது இலட்சிய அரசு நிறைவுறும் என்ற பிளேட்டோவின் வாதம் ஏற்புடையதல்ல. அவரது காலத்தில் காணப்பட்ட நகர அரசு குறைந்த எல்லை விஸ்தீரணத்தையும், குறைந்த மக்களையும் கொண்டிருந்ததனால் நேரடி மக்களாட்சி இடம்பெற வாய்ப்பிருந்தது. அவ்வாறான நகர ஆட்சியில் ஏற்பட்ட அரசியல் சீர்கேடுகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட கருத்துக்களே பிளேட்டோவின் நீதி பற்றிய கருத்துக்களாகும். அத்தகைய நீதி பற்றிய கருத்துக்கள் எல்லா இடத்துக்கும் பொருந்தும் என எதிர்பார்க்க முடியாது.

பிளேட்டோவின் கருத்துப்படி ஒவ்வொரு மனிதனும் நீதியாளனான இருக்க வேண்டும். இவர் சட்டத்தை விட நீதிக்கே முதன்மை கொடுத்து இருந்தார். ஆனால் சட்டத்துடனான நீதியே சமூகத்தில் சரியான முறையில் பயன்படும். முழுச் சமூகமே ஒழுக்க சீலராக விளங்கினால் ஒழுக்க நீதி பொருத்தமானது. ஆனால் அது எந்தளவிற்கு சாத்தியப்படும்? ஒரு வர்க்கத்திற்குச் சாதகமாக அமையும் நீதியை எல்லா மக்களும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். பிளேட்டோவின் நீதி சில வர்க்கங்களுக்கு மட்டும் சிறப்புரிமை அளிக்கும் வகையில் அமைந்திருந்தது. பிளேட்டோவின் நீதி தொடர்பான சிந்தனையில் அவர் தனியன்களுக்கு முன்னுரிமை கொடுப்பதில்லை. மாறாக பொதுமைக்கே முன்னுரிமை கொடுத்திருந்தார். தனி மனிதனுக்கு விருப்பம் இல்லாத போதும் அரசின் சட்டங்களுக்கு ஏன் அடிபணிய வேண்டும் என்ற அரசியல் மெய்யியலில் பிரச்சினை இந்த இடத்தில் உருவாகியது (Raphael, D.D., 1992 :139).

## 11. முடிவுரை

அரசியல் மெய்யியலிலும் பிளேட்டோவின் குடிரசிலும் பேசப்படும் நீதி என்ற எண்ணக்கரு உயர்வானதாக இருந்தபோதும் மக்கள் அநீதியால் வருகின்ற சௌகரிக வாழ்க்கையை ஏற்றுக்கொள்பவர்களாகவும் அநீதியால் பெறக்கூடிய பலாபலன்கள், நன்மைகளையே போற்றுபவர்களாகவும் இருக்கின்றனர். பொது நோக்கில் குற்றங்களுக்கு தண்டனை வழங்குதல் நீதி என்று கூறப்பட்டாலும் கூட மெய்யியல் நோக்கில் குற்றங்களுக்கான தண்டனை இன்னுமொரு குற்றத்தை ஏற்றபடுத்துவதாகவும் அது அநீதியானதாகவும் காணப்படுகின்றமையை நோக்கமுடிகின்றது. பிளேட்டோ பேசும் நீதி செய்த குற்றத்திற்கு தண்டனை வழங்குவதைக் காட்டிலும் அக்குற்றங்கள் இடம்பெறாமல் தடுப்பதற்குரிய வழிவகைகளை ஆராய முற்படுவது சிறந்த நீதிக்கு அடித்தளமிடுவதாக அமைகிறது. அதுமட்டுமல்லாது நீதியே நிரந்தரமானதும் எல்லோருக்கும் பொதுவானதாகவும் இருக்கும் அதேவேளை சமகாலத்தில் நீதிமன்றங்களின் சுயாதீன தொழிற்பாட்டிற்கும்

அதன் வளர்ச்சிக்கும் பிளேட்டோ கூறிய நீதி பற்றிய கருத்துக்கள் உறுதுணையாக அமைந்துள்ளன.

## 12. உசாத்துணை:

அனஸ், எம்.எஸ்.எம்., (2003), *மெய்யியல் அறிமுக உரைகள்,* பேராதனை : பண்பாட்டு வட்டம்.

ராமானுஜாசாரி. ஆர்., (மொ.பெ) (1986), *பிளேட்டோவின் குடியரசு,* புதுதில்லி : சாகித்திய அகாடமி.

சாமிநாத சர்மா, வெ., (மொ.பெ) (1985), *பிளேட்டோவின் அரசியல்,* சென்னை : திருமகள் நிலையம்.

ஜமாஹீர். பீ.எம், (2010) *மெய்யியல் - பிரச்சினைகளும் பிரயோகங்களும்*, கண்டி : நதா வெளியீடு.

நாராயணன், க., (1989), *மேலைநாட்டு மெய்ப்பொருள்,* சென்னை : தமிழ் புத்தகாலயம்.

சிவராஜா, அ., (2008), *அரசறிவியல் மூல தத்துவங்கள்*, கொழும்பு : குமரன் புத்தக இல்லம்.

தமிழ்மாறன். வி.ரி., (1998), *ஒப்பீட்டுச் சட்டம் ஒரு சில சிந்தனைகள்*, சென்னை : மதுரி மலர்வகம்.

ஜெகநாதன், சோ., (2018), *தமிழர் மரபில் மெய்யியல் சிந்தனைகள் - ஒரு நோக்கு* நெய்தல், தொகுதி : 09 எண் : 01, இலங்கை – வந்தாறுமூலை : கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

றியால், ஏ. எல். எம்., மாஹிர், ஐ. எல். எம்., (2014), *தோமஸ் ஹொப்ஸின் நீதி பற்றிய எண்ணக்கரு",* Journal of Social Review Volume 2, இலங்கை – ஒலுவில் : சமூக விஞ்ஞானத்துறை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.

Aquinas, Thomas., (1946), *Summa Theologica*, I Iae, Q.1-119. Trans. by Fathers of English Dominican Province. New York: Benziger Brothers Inc.

Aumann, Francis R. *Justice,* in Collier's Encyclopedia. Ed. by William D, Halsey and Louis Shores, (1969), USA: Crowell-Collier Education Co-operation.

Aristotle., (1941), *Politics,* in The Basic Works of Aristotle. Ed. by. Richard Mckeon. New York: Random House.

Dudley Knowles., (2001), *Political Philosophy,* USA: Routledge.

Hobbes, Thomas., (1969), *Leviathan,* Ed. by Michael Oakeshott. London: Collier – Mavmillan Ltd.

Raphael, D.D., (1992), *Problems of Political Philosophy*, London : the Macmillan Press LTD.